# தேசியப் பாடசாலைகளுக்கான அதிபர்களைத் தெரிவு செய்தல்- 2026
# (இலங்கை அதிபர் சேவையின் தரம் I)

## புள்ளி வழங்கல் திட்டம்

### 1. சேவை அனுபவம் — ஆகக் கூடிய புள்ளிகள் *30*

*(இ.அ.சே தரம் 1 இற்குப் பதவி உயர்வு பெற்ற தினம் முதல் வருடமொன்றுக்கு வழங்கப்படும் புள்ளிகளின் அளவு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 01/2019 இற்கமைய தரம் 1 இல் ஆகக்கூடிய முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள உத்தியோகத்தருக்கு சேவை அனுபவத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் அளவும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு உரிய விகிதப்படி தரம் 1 இல் முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்காகவும் புள்ளிகள் வழங்கப்படும். அத்துடன், ஒழுக்காற்றுத் தண்டனை காரணமாகவோ அல்லது சம்பளமற்ற விடுமுறை பெறுவதனாலோ திருப்திகரமான சேவைக் காலத்தை இழந்த உத்தியோகத்தருக்கு மாத்திரம் அக் காலப்பகுதிக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)*

### 2. பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம் — ஆகக் கூடிய புள்ளிகள் *20*

**2.1. அதிபர் ஒருவராக**

நியமனக் கடிதமானது சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நியமன அதிகாரி மூலமாகவோ அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரி மூலமாகவோ (அமைச்சின் செயலாளர் / மாகாணப் பிரதம செயலாளர் / மாகாணக் கல்விச் செயலாளர்) வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலை ஒன்றின் அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 03 புள்ளிகள் |
| b. | 1C பாடசாலை ஒன்றின் அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 02 புள்ளிகள் |
| c. | 2 வகை பாடசாலை ஒன்றின் அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 01 புள்ளிகள் |
| d. | 3 வகை பாடசாலை ஒன்றின் அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 01 புள்ளிகள் |

**2.2. பிரதி/ உதவி அதிபர் ஒருவராக**

| | | |
|---|---|---|
| a. | 1AB பாடசாலை ஒன்றின் பிரதி/ உதவி அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 02 புள்ளிகள் |
| b. | 1C பாடசாலை ஒன்றின் பிரதி/ உதவி அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 01 புள்ளிகள் |
| c. | வகை 2 அல்லது வகை 3 பாடசாலை ஒன்றின் பிரதி/ உதவி அதிபராக முழுமையான ஒரு வருடத்திற்கு | 01 புள்ளிகள் |

குறிப்பு 01 : 12 மாத சேவைக் காலத்திற்கு மாத்திரமே வருடத்திற்கான மொத்தப் புள்ளிகள் வழங்கப்படும், அதை விடக் குறைவான காலப்பகுதிக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. அத்துடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு இல. 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 141 வது நடைமுறை ஒழுங்குவிதிக்கமைய நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது

குறிப்பு 02 : மேலே 2.1, 2.2 இற்கு அமைய குறித்த பாடசாலையானது, நியமனம் / இடமாற்றக் கடிதம் வழங்கப்படும் போது பாடசாலை வகைப்படுத்தலுக்கமைய 1AB, 1C, 2, 3 பாடசாலையாகக் காணப்பட்டது என்பதையும், அக் கடிதங்களில் கையொப்பமிட்டவர் உரிய நியமன / அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரி ஆவார் என்பதையும் எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

### 3. மேலதிக கல்வித் தகைமைகள் — ஆகக் கூடிய புள்ளிகள் *15*

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றிலிருந்தோ அல்லது தேசிய கல்வி நிறுவகம் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்**

(ஆட்சேர்ப்பின் போது அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டலுக்காக அல்லது பதவி உயர்வின் போது அடிப்படைத் தகைமையாக கருதப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு புள்ளி வழங்கப்படமாட்டாது)

| | |
|---|---|
| 3.1. பட்டப் பின் பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை | - 15 புள்ளிகள் |
| 3.2. பட்டப் பின் டிப்ளோமா | - 12 புள்ளிகள் |
| 3.3. ஆரம்ப பட்டம் | - 09 புள்ளிகள் |
| 3.4. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா | - 06 புள்ளிகள் |
| 3.5. வேறு டிப்ளோமாக்கள் | - 03 புள்ளிகள் |

மேற்படி 3.1, 3.2, 3.3 இற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 01/2025 இற்கமையப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். அத்துடன் 3.4 மற்றும் 3.5 இன் கீழ் புள்ளிகள் வழங்கும் போது குறித்த டிப்ளோமா பாடநெறியின் காலப்பகுதி ஆகக்குறைந்தது 450 மணித்தியாலங்கள் அல்லது 9 மாதங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும். மேலும், குறித்த டிப்ளோமாவை வழங்கும் நிறுவனம் அரசாங்க அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.)

**4. ஆங்கில மொழித் தேர்ச்சி** **ஆகக் கூடிய புள்ளிகள் *05***

( தொடர்பாடல் திறமை கருத்தில் கொள்ளப்படும்)

**5. கணிணி தொடர்பான அறிவு** **ஆகக் கூடிய புள்ளிகள் *05***

( பிரயோக பயன்பாடு தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்)

**6. சேவை பாராட்டல்கள்** **ஆகக் கூடிய புள்ளிகள் *03***

கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரால் பொது 230 பி பாராட்டு மற்றும் குறைகூறல் படிவத்திற்கமைய முறைப்படி வழங்கப்பட்ட சேவை மதிப்பீடுகளுக்கு ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 சேவை மதிப்பீடுகளுக்கு

குறிப்பு:
(திணைக்களத் தலைவர் என்பவர், மாகாண பிரதம செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆவார்.)

**7. முன்வைப்பு** **ஆகக் கூடிய புள்ளிகள் *12***

கல்வித் துறையின் புதிய போக்குகள், தற்போதைய கல்விப் கொள்கைகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் கல்வித் துறையின் சவால்கள் என்பவற்றில் கவனம் செலுத்தி, தேசிய பாடசாலை அதிபர் ஒருவராக எதிர்காலத்தில் செயற்பட எதிர்பார்க்கும் விதம் குறித்து, தனது நடைமுறை அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு 05 நிமிட வாய் மொழி மூலமான முன்வைப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். அத்துடன், குறித்த முன்வைப்பின் அச்சுப் பிரதியொன்றையும் நேர்முகப் பரீட்சைச் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 7.1 பிரவேசம் மற்றும் அறிமுகம் | - 02 புள்ளிகள் |
| 7.2 உள்ளடக்கம் (பாடசாலையை இனங்காணல், குறிக்கோள், முன்மொழிவுகள்) | - 05 புள்ளிகள் |
| 7.3 முன்வைப்புத் திறன்கள் | - 03 புள்ளிகள் |
| 7.4 நேர முகாமைத்துவம் | - 02 புள்ளிகள் |

**8. சம்பவக் கற்கை** **ஆகக் கூடிய புள்ளிகள் *05***

(நேர்முகப் பரீட்சைச் சபையினால் வாய் மொழி மூலமாக முன்வைக்கப்படும் சம்பவம் ஒன்றின் அடிப்படையில் வினாக்கள் வினவப்படுவதுடன், சம்பவத்தை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வு என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்படும்.)

**9. நேர்முகப் பரீட்சையின்போது வெளிக்காட்டும் ஒட்டுமொத்தத் திறமையும் ஆளுமையும்** **ஆகக் கூடிய புள்ளிகள் *05***

**மொத்தப் புள்ளிகள்** ***100***